திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்குச் சரியான கட்டிடம் இல்லாத காரணத்தால் பல பள்ளிக் கூடங்கள் மரத்தின் கீழே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதே போன்று தான் ஒருவேளை கட்டிடங்கள் இருந்தாலும் கூட அந்தக் கட்டிடங்களுக்குத் தளங்கள் இல்லாமலும், சுவர்களில் கீறல் விழுந்தும், ஓடுகள் இல்லாமலும் ஆசிரியர்களுக்குக்கூட மேசை, நாற்காலி இல்லாமலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது பொதுப்பணித் துறை மூலமாகப் பராமரிக்கும் திட்டம்தான் இல்லை என்று சொன்னார்களே தவிர பள்ளிக்கூடக் கட்டிடமே கட்டவேண்டாம் என்று சொல்கிற திட்டம் இல்லை. அதனால் கேள்விக்கு நேரடியாக வாருங்கள். இப்போது பள்ளிக்கூடங்கள் பற்றிய வருணனைகள் எல்லாம் தேவையில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பராமரிப்பு செய்ய வேண்டும் என்றால் அவர்களிடத்திலே நிதியாதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே பொதுப்பணித்துறை மூலமாகப் பராமரிப்பு செய்யாவிட்டாலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் பராமரிப்பு வேலை செய்ய அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. கோ.சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக நடத்தப்படுகின்ற பள்ளிகள் 23,408. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல 11,532 கட்டிடங்கள் சாதாரணமாகவோ அதிகமாகவோ பழுதடைந்திருக்கின்றன. அவை அனைத்தும் இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களின் நிதியைக் கொண்டோ, அவர் குறிப்பிட்டதைப் போல வேறு பல நிதிகளில் இருந்தோ, எதை எடுத்துக் கொள்ளமுடியுமோ அதை எடுத்துக் கொண்டும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிற சிறப்புக் கல்வி நிதியில் இருந்து 3 கோடி ரூபாயையும் வைத்துக்கொண்டும், இந்த ஆண்டு அனைத்துக் கட்டிடங்களும் பழுது பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை நகர வளர்ச்சிப் பணிகளுக்கு உலக வங்கி உதவி.

*3088 திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகரின் வளர்ச்சிப் பணிகளுக்கு உலக வங்கியிடம் இருந்து நிதி உதவிகள் பெறும் நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்போது பணிகள் தொடங்கப்பெறும்?
(இ) என்னென்னப் பணிகள் தொடங்கவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உலக வங்கி உதவியுடன், மதுரை மாநகராட்சியில் திட்டப்பணிகளுக்கான அறிக்கைகள் தயார் செய்ய, கலந்தாய்வாளர்கள் (Consultants) நியமிக்கப்பட்டுள்ளனர். கலந்தாய் வாளர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் பல்வேறு திட்டப்பணிகள், ரூ. 1,715 இலட்சம் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பனைத் தொழில் வாரியம்

***3495 திரு. மா. சுந்தரதாஸ் :**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பனைத் தொழிலாளர் நலன் கருதி பனைத் தொழில் வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து, அது அமைக்கப்படுகின்ற காலத்தைப் பற்றி நிர்ணயம் செய்யப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கப் போகிறார்களோ அப்படித்தான் பனைத் தொழிலாளர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பனை ஏறுகிறார்கள். ஆகவே அவர்களைப் போல இவர்களையும் மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்து அவர்களையும் முன்னுக்குக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.